பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை 12.12.2025 கதிர் 034

## இனி இது ரகசியம் அல்ல!

'தித்வா' புயலால் நெடுந்தீவின் 90 வீதமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிப் போயின என்று அதிகாரிகள் காட்டும் கணக்கினைப் பார்த்து அந்தப் பகுதி மக்களே ☞ 2

# காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்ள முதலீடுகள் தேவை

### ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து



உலக நாடுகள் இயற்கைப் பேரிடர்களுக்கு முகங்கொடுப்பதற்கு இன்னமும் தயாராகவில்லை. அடுத்த தசாப்தத்தில் சர்வதேச நாடுகள் இவ்வாறான பல பேரிடர்களால் வெகுவாகப் பாதிக்கப்படும். எனவே எதிர்காலங்களில் இத்தகைய இயற்கைப் பேரிடர்களைத் தடுப்பதற்கு உலக நாடுகள் காலநிலைமாற்ற சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கு ஏதுவான முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சே வலியுறுத்தியுள்ளார்.

2025 நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட 'தித்வா' சூறாவளியை அடுத்து உருவான ☞ 2

## பேரிடர் பாதித்த வீடுகளுக்கு மின் கட்டணச் சலுகை தேவை

### மு.கா. தலைவர் ஹக்கீம் கோரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகள் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்காக 2025 டிசெம்பருக்குரிய மின்சாரம் மற்றும் நீர் கட்டணத்தில் 50 சதவீத தள்ளுபடியை வழங்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

## இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் எந்த உதவிக்கும் அமெரிக்கா தயார்

### அந்த நாட்டு இராஜாங்க உப செயலர் உறுதிமொழி

அரசுத்தலைவர் அநுரகுமாரவின் தலைமையில் இலங்கை மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும், அதற்குத் தேவையான எந்த உதவியையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூக்கர் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூக்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை எதிர்கொள்ளும் பேரிடர்களைச் சமாளிக்க உதவி வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்த அலிசன் ஹூக்கர், பேரிடரினால் இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தீர்வை வரிகள் தொடர்பான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்துவதாகவும், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் கடல்சார் ☞ 6

## ஆளும்தரப்புக்கு மகாநாயக்கர்களின் ஆசிகளும் பாராட்டுக்களும் கிட்டின

பேரிடரிற்குப் பிறகு மக்களின் வாழ்க்கையையும், நாட்டையும் மீண்டும் கட்டியெழுப்ப அரசுத்தலைவர் தலைமையிலான ஆளும்தரப்பு மேற்கொண்டு வரும் வேலைத்திட்டம் பாராட்டுக்குரியது என்றும், அதற்காக தங்கள் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் மல்வத்து மற்றும் அஸ்கிரி பிரதிப் பதிவாளர்களான இரு தேரர்களும் தெரிவித்தனர்.

சியாமோபாலி மகா நிகாயவின் மல்வத்து மகா விகாரை தரப்பின் பிரதிப் பதிவாளர் ராஜகீய பன்டித வண, மஹவெல ரதனபால நாயக தேரர், சியாமோபாலி மகா நிகாயவின் அஸ்கிரி மகா விகாரை தரப்பின் பிரதிப் பதிவாளர் வரலாற்று சிறப்புமிக்க பதுளு முதியங்கன ரஜமகா ☞ 2

## பேரிடருக்கான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டதை நிரூபியுங்கள்

### அமைச்சரவைப் பேச்சாளர் எதிர்க் கட்சிகளுக்குச் சவால்

'தித்வா' புயல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நவம்பர் 12, 18 மற்றும் 25 ஆகிய நாள்களில் ஆளும்தரப்புக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தாகக் கூறப்படுவதை ஆதரத்துடன் ☞ 6

## ராஜபக்சவைப் போன்று செயற்படக்கூடாது அநுர

### தொழிற்றுறை தேசிய முன்னணி இடித்துரைப்பு

அரசமைப்புப் பேரவையில் தனக்கு இணக்கமான புதியவர்களைச் சேர்த்து அதன் பின்னர் தனது நண்பரைக் கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்காகவே அப்பதவி நியமனத்துக்கான பரிந்துரை அரசுத் தலைவரால் தொடர்ந்து இழுத்தடிக்கப்படுகிறது. அரசுத் தலைவர் அநுரகுமார, மகிந்தவைப் போன்று செயற்பட முயற்சிக்க கூடாதென தொழிற்றுறை தேசிய ☞ 2

### பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்கள்

## கடன்களை மீளச் செலுத்தும் காலத்தை நீடிக்கத் தீர்மானம்

பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன்களை மீள செலுத்துவதற்கான காலத்தை, பாதிப்புக்களின் அடிப்படையில் 3 - 6 மாதங்களுக்கு நீடிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு குறுகிய காலத்துக்குள் அவசர நிலைமைகளின் ☞ 2

## பேரிடர் உயிர்ச் சேதங்களுக்கு ஆளும்தரப்பே முழுப் பொறுப்பு

### பொது ஜன பெரமுன மீண்டும் குற்றச்சாட்டு

காலநிலை குறித்து விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம். பேரிடர் ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து ☞ 2

## இனி இது .....

ஆச்சரியப்பட்டுப்போகிறார்கள். வந்த வெள்ளத்தை அதிகாரிகள் எங்கே மறைத்து வைத்திருந்தார்கள் என்று கேட்கிறார்கள் அவர்கள்.

அதற்குக் காரணம் அதிகாரிகளின் அறிக்கைதான். நெடுந்தீவில் 1409 குடும்பங்களைச் சேர்ந்த 3158 நபர்கள் வாழ்கின்றார்கள் என்கின்றன பொதுவெளியில் கிடைக்கக்கூடிய அரச புள்ளிவிவரங்கள். இவற்றில் 1216 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் வசிக்கும் 778 வீடுகள் வெள்ள நீரில் மூழ்கிவிட்டன என்றும் கொழும்புக்கு அறிவித்திருக்கின்றார்கள் அதிகாரிகள். இந்த 778 குடும்பங்களும் வெள்ள அவசர உதவியான 25 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் 893 வீட்டுகள்தான் இருப்பதாக தொகை மத்திப்பீட்டுத் திணைக்களத்தின் 2023 அறிக்கை கூறுகின்றபோதும் அங்கு 1190 வீடுகள் இருப்பதாக நெடுந்தீவு பிரதேச செயலர் இப்போது கூறுகின்றார். அதாவது கடந்த இரு வருட காலத்தில் மட்டும் 297 (சுமார் 300) வீடுகள் அங்கு புதிதாக உருவாகியிருக்கின்றன. பிரதேச சபையில் கடந்த இருவருடகாலத்தில் புதிதாகக் கட்டங்கள் அமைக்கப் பெறப்பட்ட அனுமதி விவரத்தைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றால் இது உண்மையா இல்லையா என்பது தெரியவந்துவிடும்.

அதற்கு முன்னர், பிரதேச செயலரின் அறிக்கைப்படி, 'தித்வா' வெள்ளத்தால் நெடுந்தீவில் இருக்கும் 86.24 சதவீதம் பேர் அதாவது 90 விழுக்காட்டினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 65 சதவீதமான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கின்றார். பாதிக்கப்பட்ட வீடுகளின் கணக்கு என்பது பிரதேச செயலர் இப்போது தெரிவிக்கும் 1190 வீடுகள் என்ற கணக்கின் அடிப்படையிலேயே 65 சதவீதமான வீடுகள் பாதிப்பு. இதுவே 893 வீடுகள் என்ற அடிப்படையில் பார்த்தால், 87.12 சதவீதம் வீடுகள் கிட்டத்தட்ட 90 விழுக்காடு வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் நெடுந்தீவு குறைந்தபட்சம் அரைவாசிக்கும் அதிகமாக அல்லது உயர்ந்த பட்சமாக தீவின் மையத்தில் உள்ள மிக உயர்ந்த இடங்களைத் தவிர்ந்த தீவின் ஏனைய பகுதிகள் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியிருக்கவேண்டும். அப்படித் தீவையே மூழ்கடிக்கும் அளவிற்கு அப்படியொரு வெள்ளம் தங்கள் வீடுகளுக்குள் வரவில்லை என்று நெடுந்தீவு மக்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றார்கள். அதுவும் தவிர தீவின் புவியில் அமைப்புப் பற்றித் தெரிந்தவர்கள் நெடுந்தீவில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதற்கான சாத்தியங்கள் மிக மிக் குறைவு என்கிறார்கள். மழைவெள்ளம் உடனடியாகவே கடலுக்கு வழிந்தோடும் வகையிலான நில அமைவே அங்கிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதுவும் போக, 'தித்வா' சூறாவளியின் பின்பாக இலங்கையில் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களை ஐக்கிய நாடுகள் சபையின் செய்மதி நிலையம் (The United Nations Satellite Centre -UNOSAT) அண்மையில் வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்மதிப் படங்கள் Radar (microwave) மின்காந்த அலைகளை உபயோகித்தும், Optical multispectral (IR, NIR, visible) மின்காந்த அலைகளைப் பாவித்தும் எடுக்கப்பட்டு (வெள்ளப் பகுதிகள் சிவப்பாக) நிறம் தீட்டப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

அந்தச் செய்மதிப்படங்கள் நெடுந்தீவில் எந்த வெள்ளமும் இல்லை என்று தெளிவாக காட்டுகின்றன. மருந்துக்குக்கூட ஒரு சிவப்புப் புள்ளி அந்தப் படத்தில் இல்லை. இவ்வளவெல்லாம் ஆதாரங்கள் இருந்தாலும் கூச்சநாச்சமின்றி வெள்ளத்தில் குறைந்தபட்சம் தீவின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதிகள் மூழ்கிப் போய்விட்டன என்று அறிக்கையிடுகிறார்கள் அதிகாரிகள். ஊழலை ஒழிக்க வந்தோம் என்று கூறிக்கொண்டு ஆட்சியைப் பிடித்தவர்கள் இந்த அதிகாரிகளை எப்படிக் காப்பாற்றலாம் என்று யோசித்து, பாதிக்கப்படாதவர்களுக்கு நிதி போய்ச்சேர விடமாட்டோம் என்று கூறுகிறார்களே தவிர, உண்மையில் நடந்தது என்ன என்பதை விசாரிக்க மறுக்கிறார்கள். நீதி எப்போதும் நிலைநாட்டப்படுவதல்ல, நிலைநாட்டப்படுவதாகக் காட்டப்படுவதும் முக்கியம். கண்ணுக்கு முன்னாள் நடக்கும் குழறுபடிகளை அனுமதித்துக்கொண்டு, பகிரங்கமாக அதைச் செய்பவர்களைக் காப்பாற்றிக்கொண்டு, தெரியாமல் நடந்துவிட்டது என்கிற பாசாங்குக்குள் அதை மறைத்துக்கொண்டு இந்த ஆட்சியாளர்கள் ஊழலை ஒழிப்போம் என்பது விதண்டாவாதம்தான்.

இந்தவிடயம் தொடர்பில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்துமூலமாக தெளிவுப்படுத்தி அனுப்பிய கடித த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை இங்கே அப்படியே தருகின்றேன்.

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களினது எண்ணிக்கை 1410, பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 4102,மொத்த வீடுகளின் எண்ணிக்கை 1190, டித்வா புயல் பேரிடர் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1216, பேரிடர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் 25000 ரூபா நிவாரண கொடுப்பனவுக்காக தெரிவுசெய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 778 ஆக காணப்படுகிறது.

பேரிடர் காலத்தில் நெடுந்தீவு பிரதேசத்துக்கான சகல போக்குவரத்து மார்க்கங்களும் முடக்கப்பட்டதுடன், மின்சாரம் மற்றும் சகல தொலைத்தொடர்பு வசதிகளும் துண்டிக்கப்பட்டிருநதது. இதனால் குறித்த நேரத்தில் வெள்ள இடரில் உடனடியாக கிராமங்கள் தோறும் சென்று சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலமை காணப்பட்டது. இதனால் எமது புள்ளிவிவர தகவல்களின்

அடிப்படையிலும், பேரிடர் அனுபவங்களின் அடிப்படையிலும் மாவட்ட செயலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் நெடுந்தீவில் வசித்த சகல குடும்பங்களும் சமூக, பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளன. பெரும் பாதிப்புகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர். இதனடிப்படையிலேயே குறித்த தகவல்கள் வழங்கப்பட்டன.

தற்போது பேரிடர் உதவிச் சேவைகள், நிலையச் சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய படிவங்களுக்கு அமைவாகப் பொருத்தமான உத்தியோகத்தர்களால் பெறப்படுகின்ற உறுதிப்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு பேரிடர்களில் சிக்கி 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும், நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயும், இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தும், இன்னமும் முழுமையாக மதிப்பிடப்படாத பெருந்தொகை சொத்துக்கள் சேதமடைந்தும் நாடு பேரழிவுக்கு முகங்கொடுத்துள்ளது.

இப்பேரழிவில் இருந்து மீள்வதற்கு சர்வதேசநாடுகள், அரசசார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், தன்னார்வலர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பலதரப்பட்ட வழிகளில் தொடர் உதவிகளை வழங்கிவரும் நிலையில், ஐக்கிய நாடுகள் சபை அதன் முகவரமைப்புக்களுடன் இணைந்து இலங்கைக்கு அவசியமான உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்கில் 'மனிதாபிமான முன்னுரிமையளிப்புத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தை தொடக்கிவைத்து, அதுபற்றி விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைக்குச் சமாந்தரமாக ஏனைய ஆசிய நாடுகள் முகங்கொடுத்திருக்கும் இயற்கை பேரிடர்கள் குறித்தும், இயற்கைப் பேரிடர்கள் உள்ளடங்கலாக காலநிலைமாற்ற சவால்களைக் கையாள்வதற்கு சர்வதேச சமூகம் தயாராக வேண்டியதன் அவசியம் குறித்தும் செய்தியாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சே பதிலளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் தான் பல ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார் எனவும், இருப்பினும் ஒரே சந்தர்ப்பத்தில் உலகில் பல நாடுகள் பேரிடர் மற்றும் நெருக்கடி நிலைகளுக்கு முகங்கொடுத்திருப்பது இதுவே முதற்தடவை எனவும் சுட்டிக்காட்டிய அவர், இது உலகநாடுகளுக்குப் பெரும் சவாலாகும் எனக் கரிசனை வெளியிட்டார்.

'உலகநாடுகள் இவ்வாறான பேரிடர்களுக்கு முகங்கொடுப்பதற்கு இன்னமும் தயாராகவில்லை. அண்மைய காலங்களில் மனிதாபிமானத் தேவைகளுக்கான நிதியளிப்பு கணிசமான அளவினால் வீழ்ச்சியடைந்திருக்கிறது. உலக நாடுகளைப் பொறுத்தமட்டில், அவற்றுக்கு முன்னுரிமைக்குரிய வேறு பல விடயங்கள் இருக்கின்றன. அடுத்த தசாப்தத்தில் சர்வதேச நாடுகள் இவ்வாறான பல பேரிடர்களால் வெகுவாகப் பாதிக்கப்படும்' என்றும் மார்க் அன்ட்ரூ பிரான்சே எச்சரிக்கை விடுத்தார்.

எனவே எதிர்வருங்காலங்களில் இத்தகைய இயற்கைப் பேரிடர்களைத் தடுப்பதற்கும், அவற்றினால் ஏற்படக்கூடிய தாக்கங்களுக்கு செயற்திறன்மிக்க விதத்தில் முகங்கொடுப்பதற்கும் உலகநாடுகள் காலநிலைமாற்ற சவால்களிலிருந்து மீண்டெழுவதற்கு ஏதுவான முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

## ஆளும்தரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரையின் பொறுப்பாளர் கலாநிதி வண, முருத்தெனியே ஸ்ரீ தம்மரதன நாயக தேரர் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே நிலங்க தேல ஆகியோர் நேற்று முற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் அரசுத் தலைவர் அநுரகுமாரவைச் சந்தித்தனர்.

கண்டி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி மற்றும் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன. மக்களை மீள்குடியமர்த்தும் பணிகளில் தலதா மாளிகை வழங்கக்கூடிய பங்களிப்புகள் குறித்து இதன்போது தியவடன நிலமே அரசுத் தலைவர்யின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையினால் "யூளணுற்ஷயி-ஷஜஆ றீஷஷ் ஸிழிஜவழி' நிதியத்திற்கு நிதியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

## ராஜபக்சவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் நிறைவேற்று உறுப்பினர் லசித்த சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தொழிற்றுறை தேசிய முன்னணியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச பதவிகள் மற்றும் உயர் பதவிகளுக்கான நியமனம் தகுதி மற்றும் மூப்பு அடிப்படையில் வழங்கப்படும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

தேசியகணக்காய்வாளர்திணைக்களத்தின் தலைமை கணக்காய்வாளர் அதிபதி பதவி வறிதாகியுள்ளது. 2025 ஏப்ரல் மாதமளவில் கணக்காய்வாளர்நாயகம் சேவையில் இருந்து நீங்கியதன் பின்னர் அரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட நியமனத்தை அரசமைப்புப் பேரவை நிராகரித்தது.

இவ்வாறான நிலையில் இன்றளவில் தலைமை கணக்காய்வாளர் அதிபதி ஒருவர் நியமிக்கப்படவில்லை. அரசுத் தலைவரால் முன்வைக்கப்படும் பெயர் பரிந்துரைகளை அரசமைப்பு பேரவை நிராகரித்துள்ளது.

அரசமைப்புப் பேரவையின் மக்கள் பிரதிநிதிளில் மூவர் எதிர்வரும் ஆண்டுடன் சேவையில் இருந்து விலகவுள்ளார்கள். அதன் பின்னர் தனக்கு இணக்கமானவர்களை அரசமைப்புப் பேரவைக்கு நியமித்து விட்டு, தனது சகாவைத் தலைமைக் கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்காகவே இந்த நியமனம் இன்றுவரை இழுத்தடிக்கப்படுகிறது.

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச அரசமைப்புச் சபையை நியமிக்காமலே அரச உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கினார். அரசுத் தலைவர் அநுரகுமாரவும் மகிந்தவின் பகுதி இரண்டாகச் செயற்படக்கூடாது.

தேசியகண்க்காய்வாளர்திணைக்களத்தில் தலைமை அதிபதி பதவிக்கு அடுத்த நிலையில் உள்ளவரை தகுதி மற்றும் முதுநிலை அடிப்படையில் நியமிக்க வேண்டும் என்பதை அரசுத் தலைவரிடம் வலியுறுத்துகிறோம் -என்றார்.

## பேரிடர் உயிர்ச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்புக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூற வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வளிமண்டவியல்திணைக்களம் காலநிலை குறித்துவிடுத்த அறிவிப்புக்களை ஆளும்தரப்பே அலட்சியம் செய்துள்ளது. முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை அடிப்படையாகக்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம்.

பேரிடர் ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து இழப்புக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூற வேண்டும். ஆளும்தரப்பே அரசியல் பழிவாங்கல்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுவதால் அரச நிர்வாகத்தின் அடிப்படை விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படுவதில்லை.

பேரிடர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கியுள்ளோம். மக்களுக்கு வழங்கும் உதவிகளை ஊடகங்களில் பகிரங்கப்படுத்தவில்லை. நாட்டு மக்கள் நெருக்கடிக்குள்ளான சந்தர்ப்பத்தில் ராஜபக்சர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்றார்.

## கடன்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதானபுதியகடன்களைவழங்கும்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியால் சகல வங்கிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பு கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

கடன் பெற்றோருக்கான சலுகைகள் தொடர்பில் டிசெம்பர் 5 இலங்கை மத்திய வங்கியினால் சகல வங்கிகளுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இயற்கைப்பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முழுக்கடன் அல்லது கடனுக்கான வட்டியை மீளச் செலுத்துவதற்கான காலத்தை 3 - 6 மாதங்கள் வரை நீடித்துச் சலுகை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பாதிப்புக்களை ஆராய்ந்து அவற்றுக்கமைய தள்ளுபடி வழங்கப்படும்.

இவ்வாறு கடன் மீள் செலுத்தல் தள்ளுபடி செய்யப்படும் காலப்பகுதிக்குள் கடன் ஒப்பந்தத்தின்போது குறிப்பிடப்பட்ட வட்டியை விட அதிகவட்டியை அறவிடாமல் இருப்பதற்கும், காலம் தாழ்த்தப்படுவதற்கான மேலதிக வட்டியை அறவிடாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புதிய கடன்களை வழங்குவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வரவு - செலவு திட்டத்தில் இவ்வாறு உதவிக் கடன் வழங்குவதற்காக 81 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியையும் புதிய கடன் வழங்கலின்போது பயன்படுத்த முடியும்.

டிசெம்பர் மாதத்துக்குள் இந்தக் கடனை வழங்குவதற்கான நடவடிக்கை

தொடர்ச்சி 06ம் பக்கம்....




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எதிர்காலத்திற்கான முதலீடு

'தித்வா' சூறாவளி மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருவெள்ளம், நிலச்சரிவு ஆகியவை இலங்கையின் பேரிடர் தயார்படுத்தல் அமைப்பினைக் கடுமையாகச் சோதித்துவிட்டன. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளார்கள்; பலர் இன்னமும் தற்காலிக முகாம்களில் பாதுகாப்பின்றி வாழ்கின்றனர். இந்நிலையை முன்னிட்டு, இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க்–அன்ட்ரே ஃப்ராஞ்ச் தெரிவித்துள்ள எச்சரிக்கை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது:

'ஒரு மனிதன்கூட வீட்டின்றித் தங்கும் நிலை நீடிக்கக்கூடாது; பாதுகாப்பான வாழ்விடமே இன்றைய அவசர முன்னுரிமை.' இந்த அடிப்படைத் தேவையை உறுதிசெய்வது அரசின் கடமையாக இருந்தாலும், இதன் மூலம் வெளிச்சத்திற்கான ஒரு பெரிய உண்மை மேலெழுகிறது:

இலங்கை எதிர்காலப் பேரிடர்களுக்குத் தயாராக இல்லை என்பதே அந்த உண்மை.

மேலும் ஃப்ராஞ்ச் சுட்டிக்காட்டியபடி – உலகமே அத்தகைய பேரிடர்களுக்கு போதுமான அளவு தயாராக இல்லை என்பதும் தெரிகிறது.

உலகளவில் மனிதாபிமான உதவி நிதி குறைந்து கொண்டிருக்கிறது. காலநிலை மாற்றம் தீவிரமடைந்து, அடுத்த பத்தாண்டுகளில் இதுபோன்ற பேரழிவுகள் அதிகரிக்கப்போகின்றன. இந்நிலையில், இலங்கை பழைய முறைகளிலோ எதிர்வினை அடிப்படையிலான அணுகுமுறையிலோ தங்கி இருக்க முடியாது.

### நீண்டகால முதலீடுகள் தேவை

வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு அரசு இடமாற்றத் திட்டங்களைத் திட்டமிட்டபடி முன்னெடுத்தாலும், சட்டவிரோத குடியிருப்புகளில் இருந்தவர்கள் மீண்டும் அதே ஆபத்தான இடங்களில் வாழ்வதைத் தவிர்க்க வேண்டும். ஃப்ராஞ்ச் வலியுறுத்தியபடி, 'அவர்கள் சென்றிருந்த ஆபத்தான நிலைகளுக்குத் திரும்ப அனுமதிக்கக்கூடாது.'

இது வெறும் நெருக்கடியைத் தீர்க்கும் நடவடிக்கை அல்ல; இது ஒரு நீண்டகால முதலீடு.

பாதுகாப்பான நிலப்பரப்பை அடையாளம் காணுதல், அரசுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்புகள் அமைத்தல், வீடமைப்பு அமைச்சகத்தின் மாற்று வழிகள் போன்றவை தற்காலிக வசதியைக் கடந்துவரும் நிரந்தரத் தீர்வுகள்.

மலைப்பகுதிகளில் வீடுகள் அழிந்து, சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பெரியளவு இடிபாடுகளை அகற்றுதல், சாலைகளை மீட்டெடுத்தல், மேடு–சரிவு கண்காணிப்புத் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல் – இவை அனைத்தும் நாட்டின் கட்டமைப்பு எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும் செயல்பாடுகள்.

இவற்றில் முதலீடு செய்வது செலவல்ல; அது எதிர்கால உயிர், சொத்து மற்றும் தேசிய வளர்ச்சியைப் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை. அதுவே தற்போதைய தேவை.

### வெள்ளத்தை தாங்கும் கட்டமைப்பு

களனி ஆறு உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ளத்தடுப்பு அமைப்புகள் இல்லாததாலோ அல்லது போதாமையாலோ இந்தப் பேரிடரின்போது பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் குறிப்புப்படி,

'களனி போன்ற நதிகளின் இருபுறத்திலும் பாதுகாப்பு மதில்கள், அணைக்கட்டுகள், வெள்ளத் தடுப்பு தடுப்பணைகள் அவசியம்.'

இது உடனடி முன்னுரிமை. ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் அதே பகுதிகள் மூழ்கிக்கொண்டிருக்கும்போது, இதற்கான முதலீட்டை தள்ளிப்போடுவது நியாயமல்ல. அங்கு மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துத் தாழ் நிலப் பகுதிகளிலும், குறிப்பாக ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் இந்த அணுகுமுறை மிக மிக அவசியம். அதற்கான கொள்கைகள், சட்டங்கள் விரைந்து உருவாக்கப்படவேண்டும்.

### காலநிலைச் சவால்கள் எதிர்கொள்ளும் பாதீடு

இலங்கை ஆண்டுதோறும் வழங்கும் பாதீட்டில் பெரும்பங்கு இயல்பான துறைகளுக்கே செல்கிறது; ஆனால் காலநிலைப் பேரிடர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி கொஞ்சம். இந்நிலை தொடர்ந்தால், வரவிருக்கும் பேரழிவுகள் நாட்டை மீண்டும் மீண்டும் முடக்கிவிடும்.

ஆகவே, வெள்ளத் தடுப்பு கட்டமைப்பு, நிலச்சரிவு தடுப்புப் பொறிமுறை, தரவுத்தளம் மற்றும் முன்கூட்டியே எச்சரிக்கும் தொழில்நுட்பங்கள், விரிவான குடியிருப்பு மறுசீரமைப்பு திட்டங்கள், இவையனைத்திற்கும் பாதீட்டின் உள்ளேயே தனிநிதி ஒதுக்கீடு கட்டாயம்.

இது சர்வதேச நிதி உதவி வரும் எனக் காத்திருக்கும் பணி அல்ல.

உலகமே நிதி நெருக்கடியில் இருக்கும்போது, இலங்கை தன்னுடைய பாதுகாப்புக்கான நிதியைத்தானே முன்னிலைப்படுத்தவேண்டும். தொடர்ந்தும் படைத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்குவதைத் தவிர்த்து அவசியமான இந்தத் துறைகளுக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்கவேண்டும்.

பேரிடர் மேலாண்மை ஒரு நிகழ்வு நடந்தபின் தொடங்கும் செயல்முறை அல்ல;அது முன்னெச்சரிக்கையுடன் கட்டப்பட வேண்டிய தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பு.

இன்றைய தவறுகள் நாளைய உயிரிழப்புகளாக மாறக்கூடியவை.

எனவே, அரசு தனது கொள்கைகளில் பேரிடர் மேலாண்மையை ஒரு துணைத் துறையாக அல்ல, தேசிய பாதுகாப்பின் மையக் கல்லாக கருத வேண்டும்.

சைக்க்ளோன் டிட்வாவின் அழிவு நமக்கு கற்றுத்தந்த மிகப் பெரிய பாடம் இதுதான். பேரிடர்கள் தவிர்க்கமுடியாதவை; ஆனால் அவை ஏற்படுத்தும் சேதங்களை நாம் தவிர்க்க முடியும்.

அதற்கான ஒரே வழி திட்டமிட்ட முதலீட்டு முடிவுகளை இன்றே எடுத்து, எதிர்காலத்திற்கான பாதுகாப்பை கட்டியெழுப்புவது.

இதில் தாமதத்திற்கு இடமில்லை. அலட்சியத்திற்கு அனுமதியில்லை.

முன்னெச்சரிக்கையே மக்கள் பாதுகாப்பின் முதல் சட்டம்.

# உயர் தரப் பரீட்சார்த்திகளுக்கு

பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் தேர்வுகள் நடைபெறாத பாடங்களை 2026 ஜனவரி 12 தொடக்கம் ஜனவரி மாதம் 20 வரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான திருத்தப்பட்ட பரீட்சை நேர அட்டவணை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடர் பாதிப்படைந்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாதிருப்பின் தங்களுடைய பாடசாலை அதிபருக்கு அறியத்தரல்வேண்டும். அவ்வாறு அதிபர்களும் தமது பாடசாலையில் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இருப்பின் அது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் (பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு) ஆகியோருக்கு அறியத்தர வேண்டும் என்றும் பரீட்சை திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறே பாதிப்படைந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாதிருப்பின் 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0112784208, 0112784537, 0112786616 ஆகிய இலக்கங்களுக்கு அழைத்து தகவல்களை தெரிவிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# மாணவர்களுக்கு கல்வியில் உதவிசெய்ய டிஜிட்டல் நுட்பத்தை நாடும் ஆளும்தரப்பு

'தித்வா' சூறாவளியால் இலங்கையில் ஏற்பட்ட பேரிடரின் பின்னணியில், கல்வி அமைச்சு, மாணவர்களுக்குத் தொடர்ச்சியான கல்வி ஆதரவை வழங்குவதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தத் தீர்மானித்துள்ளது. அதற்கமைய மாணவர்கள் எந்த இடத்திலிருந்தும் பாட உள்ளடக்கங்களையும் கடந்த கால வினாத்தாள்களையும் அணுகுவதற்கு ஏதுவாக, தேசிய மின் கற்றல் தளமான ஈ–தக்ஸலாவுக்கான அணுகலை கல்வி அமைச்சு மேம்படுத்தியுள்ளது.

இந்த எதிர்பாராத அவசரகால சூழ்நிலையில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை உணர்ந்து, பாடசாலை மூடல்கள் மற்றும் வெளிப்புற நெருக்கடிகளைப் பொருட்படுத்தாமல், பரீட்சைக்கான தடையற்ற தயாரிப்பை மாணவர்கள் பெறுவதை உறுதிசெய்ய கல்வி அமைச்சினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் பிரதமரின் டிஜிட்டல் மாற்றம் தொடர்பான செயலணியும் உள்ளடங்கிய ஒரு கூட்டுச் செயலணியின் அர்ப்பணிப்புள்ள முயற்சிகளின் மூலம், இந்த விரைவான டிஜிட்டல் மயமாக்கல் சாத்தியமானது. அவர்களது துரித ஒருங்கிணைப்பினால் அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்கள் சேகரிக்கப்பட்டு, பதிவேற்றப்பட்டு, மாணவர்களுக்கு அணுகக்கூடியதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# அநுரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி குற்றப் பிரேரணை கொண்டுவரவேண்டும்

## பொது ஜன பெரமுன செயலாளர் வலியுறுத்து

அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டு வரவேண்டும். அப்போதுதான் பல உண்மைகள் வெளிவரும், ஆளும்தரப்பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பலவீனமடையும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பேரிடர் ஏற்பட்டு இரண்டு வாரம் நிறைவடைந்துள்ளது. ஆளுங்கட்சியான ஜேவிபி பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன உதவியளித்துள்ளது? அல்லது ஆளும்தரப்பால் நியமிக்கப்பட்ட நிதியத்துக்கு எவ்வளவு நன்கொடை வழங்கியுள்ளது?

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிவில் அமைப்பினர், தன்னார்வக் குழுக்கள் அல்லது பொதுமக்கள் வழங்கும் உதவிப் பொருட்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி முத்திரையைப் பதித்து அவற்றை வழங்கும் நடவடிக்கைகள் மாத்திரமே இடம்பெறுகின்றன. ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அனைவரும் இவ்வாறுதான் செயற்படுகிறார்கள். பிறர் கொடுப்பதை தாம் கொடுப்பதை போன்று விநியோகிக்கிறார்கள்.

அரசுத்தலைவர் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை தொகைக் கணக்கில் குறிப்பிட்டார். இன்றளவில் அந்த உதவிகள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதை ஆளும்தரப்பே தரவுகளுடன் குறிப்பிடவேண்டும்.

இலங்கை மிக மோசமான காலநிலையை எதிர்கொள்ளப் போவதாக வளிமண்டலவியல் திணைக்களம் முன்கூட்டியதாக அறிவித்தும் ஆளும்தரப்பே அதனைக் கருத்திற் கொள்ளாமல் பயனற்ற நிகழ்வுகளை நடத்துவதில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டது.

ஆளும்தரப்பின் அலட்சியத்தால் இந்தப் பேரிடரின் விளைவு பாரதூரமானதாக அமைந்தது. தனது இயலாமை மற்றும் தவறை மறைத்துக் கொள்வதற்கான அரச அதிகாரிகள் மீது தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசுத் தலைவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் பல உண்மைகள் வெளிவரும். அத்தோடு ஆளும்தரப்பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் பலவீனமடையும்.

அரசுத் தலைவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவந்தால் நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம். பேரிடர் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு அரசுத்தலைவர் பொறுப்புக்கூறவேண்டும் - என்றார்.

# இருவர் கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய, பிரபல குற்றவாளி ஒருவரின் உறவினர்கள் எனக் கூறப்படும் இரு சந்தேகநபர்கள் 15 துப்பாக்கித் ரவைகளுடன் வணிகக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து பெண் ஒருவர் உட்பட இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்திருந்தனர்.

இருவரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடன் நெருங்கிய தொடர்பை பேணிவந்தவர்கள் என்பது விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய துப்பாக்கி ரவைகளை வைத்திருத்தல், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளின் வங்கிக்கணக்கில் பணத்தை வைப்பிலிடல் உள்ளிட்ட பணப்பரிமாற்றம் மற்றும் குற்றவாளிகளுக்கு ஆதரவளித்தல் ஆகிய குற்றங்களில் இவர்கள் ஈடுபட்டனர் என்பது தெரியவந்திருக்கிறது.

கைதான சந்தேகநபர் 35 வயதுடையவர். மீட்டியாகொடை பகுதியை சேர்ந்தவர். கைதான பெண் 25 வயதுடையவர். எம்பிலிப்பிட்டிய பகுதியை சேர்ந்தவராவார்.

சந்தேகநபர்கள் இருவரும் தற்காலிகமாகத் தங்கியிருந்த கொழும்பு 10 பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றின் அறையைச் சோதனையிட்டபோது, சந்தேகநபருக்குச் சொந்தமான மடிக்கணினியின் பையொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 9 எம்.எம் ரக 15 துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டன.

கைதுநடவடிக்கையை தொடர்ந்து சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, தெரியவந்த தகவலுக்கமைய குட்டிக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துங்கம பகுதியிலுள்ள வீடொன்றை அதிகாரிகள் சோதனையிட்டிருந்தனர்.

இதன்போது போதைப்பொருள் வர்த்தகத்தில் மூலம் பெறப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 15 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் அலுமாரியொன்றிலிருந்து நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவில் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தற்போது தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் பிரபல குற்றவாளி ஒருவரின் உறவினர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இருவரையும் 72 மணி நேரத் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து வணிகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# பேரிடர் உதவிச் செயல்முறை அரசியல்மயமாக்கப்படக்கூடாது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

பேரிடர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும்செயல்முறைஅரசியல்மயமாக்கப்படக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். சிலாபம் வைத்தியசாலைக்கு 46 இலட்சம் மதிப்புள்ள குருதிசுத்திகரிப்புஇயந்திரம்உள்ளிட்டமருத்துவ இயந்திரங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வில் நேற்றைய தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சலுகைகளைப் பெறுவதற்கு அரச அதிகாரிகளான கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் போன்றோரின் சான்றிதழ் மட்டுமே போதுமானது என்றும், 'பிரஜா சக்தி' குழுக்களின் ஒப்புதலைக் கோருவது இந்தச் செயல்முறையைத் தவறான திசைக்கு இட்டுச் செல்லும் என்றும் அவர் குற்றம் சாட்டினார். உதவி வழங்கும் நடவடிக்கையில் தூய்மையான, பொறுப்புணர்வுள்ள பொறிமுறையைச் செயல்படுத்த வேண்டும் என்றும் கோரினார்.

இலவச மருத்துவம் என்பது அரசு மருத்துவமனைகளின் மருந்துச் சீட்டுகளை வைத்து தனியார் மருந்தகங்களில் மருந்து வாங்குவது அல்ல என்று குறிப்பிட்ட சஜித் பிரேமதாச, நாட்டின் இலவச சுகாதாரச் சேவைகள் மேம்படுத்தப்பட்டு உயர்நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றார்.

புயலால் சிலாபம் மருத்துவமனையில் மட்டும் சுமார் 600 மில்லியன் ரூபா மதிப்புள்ள உபகரணங்கள் சேதமடைந்துள்ள நிலையில், சுகாதாரக் கட்டமைப்பை மீட்டெடுத்து இலவச சேவைகளை உயர்மட்டத்திற்குக் கொண்டுவர எதிர்க்கட்சி பாடுபடும் என்று உறுதியளித்தார். இலங்கையின் இடர் முகாமைத்துவ செயல்முறையில் காணப்படும் பலவீனங்கள் குறித்து ஆழமான ஆய்வு தேவை என்றும், பேரிடர்ம் குறித்த தகவல்கள் கிடைத்த பின்னரும் நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிக்க, ஆளும்தரப்பே சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி, தற்போதுள்ள ஒப்பந்தத்தை மாற்றி, மக்களுக்கு உகந்த திருத்தங்களுடன் வாக்குறுதியளிக்கப்பட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

## மண்சரிவு அபாயம் காரணமாக 806 பேர் வீடுகளிலிருந்து பெயர்வு

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தில் 238 குடும்பங்களைச் சேர்ந்த 806 பேர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வடகிழக்குப் பருவமழையின் தீவிரம் காரணமாகப் பலத்த மழை பெய்து வருவதால், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பதுளை மாவட்டச் செயலாளர் பிரபாத் அபயவர்தன தெரிவித்துள்ளார்.

அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்த மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுமார் 14 பிரிவுகள் பேரிடர் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை பாதிக்கப்படாமல் இருந்த ரிதீமாலியத்த பிரதேசமும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டார்.

பதுளை கலுகேல மலையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 50 குடும்பங்களைச் சேர்ந்த 129 நபர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர். சொரனதோட்ட பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 157 பேரும், ஊவா பரணகமவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும், ரிதீமாலியத்தவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், மீகஹகிவுலவில் மண்சரிவு அச்சுறுத்தல்கள் காரணமாக 35 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேரும், ஹாலி-எல பிரதேச செயலாளர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேரும், எல்ல பிரதேசத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேரும் என மொத்தமாக, 238 குடும்பங்களைச் சேர்ந்த 806 நபர்கள் தங்கள் வீடுகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 37 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய பலத்த மழையைத் தொடர்ந்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மொத்தம் 494 மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளை ஆய்வு செய்துள்ளது.

மேலதிகமாக, மேலும் 2,198 இடங்களில் ஆய்வு செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காலநிலை சற்று சீராகியிருந்தாலும், நான்கு மாவட்டங்களில் உள்ள 37 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கைகள் தொடர்ந்து அமுலில் உள்ளன.

கண்டி மாவட்டத்தில் உடபலாத்த, கங்காவட கோரளை, உடதும்பர, தொழுவ, மினிபே, பஹத ஹேவாஹெட்ட, மெததும்பர, தெல்தோட்டை, அக்குரணை, கங்கா இஹல கோரளை, பஹததும்பர, யட்டிநுவர, தும்பனை, உடுனுவர, ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, பஸ்பாகே கோரளை, பன்வில, ஹதரலியத்த, குண்டசாலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல, ரம்புக்கணை, அரநாயக்க, புலத்கொஹுபிட்டிய, எட்டியாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம, மல்லாவபிட்டிய, மாவத்தக பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தளை மாவட்டத்தில் நாவுல, ரத்தோட்டை, அம்பன்கங்க கோரளை, உகுவெல, வில்கமுவ, யட்டவத்த, மாத்தளை, பல்லேபொல, லக்கல-பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் இவ்வாறு தொடர்ந்தும் மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வேளை நேற்று மாலை வரை தித்வா புயலின் தாக்கத்தினால் 339 பேர் உயிரிழந்துள்ளதோடு, 210 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும் 495 093 குடும்பங்களைச் சேர்ந்த 1, 703 318 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 563 குடும்பங்களைச் சேர்ந்த 84 674 பேர் 866 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை 5588 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, 87 496 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு தூதுவர்கள் 7 பேர் ரூபா 3.6 மில்லியன் நிதி உதவி

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் இலங்கைக்கான வெளிநாடுகளின் தூதுவர்கள் எழுவர் இணைந்து தமது தனிப்பட்ட சம்பளத்தில் குறித்தவொரு தொகையை ஒதுக்கி, அதன்மூலம் நன்கொடையாகத் திரட்டிய 3.6 மில்லியன் ரூபாவை அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் கையளித்துள்ளனர்.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பேரிடர்ங்களில் சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அந்தவகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் இலங்கைக்கான வெளிநாடுகளின் தூதுவர்கள் இணைந்து தமது தனிப்பட்ட சம்பளத்தில் குறித்தவொரு தொகையை ஒதுக்கி, அதன்மூலம் திரட்டிய 3.6 மில்லியன் ரூபாவை வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் நேற்று வியாழக்கிழமை (11) கையளித்துள்ளனர்.

இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் டெவி கிஸ்டினா டொபிங், இலங்கைக்கான கொரியத் தூதுவர் லீ மியொன், இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற், இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத்

## மன்னார் முள்ளிக்குளத்தில் 2 காற்றாலைகளுக்கு அனுமதி

மன்னார், முள்ளிக்குளம் பிரதேசத்தில் தலா 50 மெகாவாற்று காற்றாலை மின்சார உற்பத்தி நிலையங்கள் 2 நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2030 ஆண்டளவில் நாட்டுக்கான மின்சார வழங்கலின் 70 % மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யும் குறிக்கோளை அடைவதற்கான அரசின் விரிவான திட்டத்துக்கமைய 20 ஆண்டு தொழிற்பாட்டு காலப்பகுதியில் நிர்மாணித்தல், உரித்தை கொண்டிருத்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் 100 மெகாவாற்று காற்றாலை மின்னுற்பத்திப் பூங்கா (தலா 50 மெகாவாற்று கொண்ட 02 மின்னுற்பத்தி நிலையங்கள்) திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தனியார் துறையின் ஆர்வமுள்ள அபிவிருத்தியாளர்களிடமிருந்து முன்மொழிவுகளை கோருவதற்காக 2025-02-10 அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் முறைமையை பின்பற்றி மேற்குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவு கோரப்பட்டு, ஏழு பேர் (7) தமது திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்குறித்த முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் ளீலிஜவிலிஷமிஷ்றது லிகூஷ் ராஷ்-ற்யியிழிஜவழி ஊணஸிளீ & ம்ழிஸஷ்- ஊணஷ்ளஷஷ்வி னிலிமிலிஷ ளீலிதுஸ்ரீழிஜதீ (ஸிழிஜவழி) ஸிஷ்துஷ்மிள- மற்றும் நிஷ்ஜ- ய்லிஷஉள ஊணஸிளீ ஆகியவற்றுக்கு மேற்குறித்த இரண்டு (2) 50 மெகாவாற்று காற்றாலை மின்னுற்பத்தி வசதிகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

## ஆசிய பசுபிக் பேரிடர் நிதியத்திலிருந்து உதவிகளைப் பெற ஆளும்தரப்பு முடிவு

பேரிடருக்குப் பின்னரான உதவி மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக ஆசிய பசுபிக் பேரிடர் பதில்வினையாற்றல் நிதியத்திலிருந்து நன்கொடை பெறுவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

நோய் பரம்பல் உள்ளிட்ட இயற்கை பேரிடர்ங்கள் காரணமாக ஏற்படும் பேரிடரின் பின்னர் உயிர்காப்பு சேவைகளை உடனடியாக இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் உறுப்புநாடுகளுக்கு அபிவிருத்தி நன்கொடை வழங்குவதற்காக 2009-04-01ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியில் ஆசிய பசுபிக் பேரிடர் பதில்வினையாற்றல் நிதியம் நிறுவப்பட்டுள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக முகங்கொடுத்த பேரிடர் தொடர்பாக செயற்படும் அவசர பதில்வினையாற்றல் திட்டத்துக்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கி ஆசிய பசுபிக் பேரிடர் பதில்வினையாற்றல் நிதியத்தின் கீழ் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. மேற்குறித்த நன்கொடை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உயிர்ப் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய, மேற்குறித்த நன்கொடையை பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் தொடர்புடைய உடன்படிக்கையை எட்டுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## கடன்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தில் இதற்காக மேலும் 500 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதேவேளை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி பிரிவின் கடன் திட்டங்களை ஒரு வரையறைக்குள் ஒருங்கிணைத்தல் மற்றும் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை மீள கட்டியெழுப்புவதற்கு உதவும் கடன் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல ஆண்டுகளாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி பிரிவை பலப்படுத்துவதற்காக அரசு பல்வேறு சலுகை கடன் திட்டங்கள் அமுல்படுத்தியுள்ளது.

அவற்றில் கைத்தொழில் மற்றும் உறபத்தித் துறைகளில் முதலீடு செய்வதற்காக ரீனிஞூஸிசி - கட்டம் ஞூஞூத சுற்றாடல் நேய நிதியாக்கலுக்காக சி-ய்யூஞூசிஹிம் கட்டம் ஞூஞூத மற்றும் அனைத்து நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு விரிவான மற்றும் இலகுவான பிரவேசத்துடன் நிதியுதவி வழங்கும், அரசினால் நிதி வழங்கப்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிபிரிவைமீண்டும்உயிரோட்டம் பெற செய்தல் ஆகிய கடன் திட்டங்களை ஒருங்கிணைத்து, 2026 ஆண்டிலிருந்து யூசி-னிரீனிசி ஊஸிஷீரீ திட்டத்தை அமுல்படுத்துவதற்கும், பேரிடர் நிலையால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை மீண்டும் உயிரூட்டுவதற்காக பேரிடர் உதவிக் கடன் திட்டம் எனும் பெயரில் புதிய கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்கீழ் அண்ணளவாக 130,000 தொழில்முயற்சிகளுக்கு உடனடிமற்றும்மத்திய கால நிதியுதவி வழங்கும் செயன்முறையை அறிமுகம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேசக் கடன் திட்டத்தின் கீழ் நுண் தொழில்முயற்சிகளுக்கு 250,000 ரூபா மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு ஆகக்கூடியது 1,000,000 ரூபா தொகையை 6 மாத சலுகைக் காலத்துடன் வருடாந்தம் 3மூ வட்டி விகிதத்தில் 3 ஆண்டு காலப்பகுதிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கடன் திட்டத்தை அமுல்படுவதற்கு சுநு-ஆளுஆநு - னுளையளவநச சுநடநைக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

## பேரிடருக்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபிக்குமாறு எதிர்க்கட்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பிற்கு சவால் விடுக்கின்றோம். இந்த பேரிடரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் ஒப்பிட்டு அரசியல் இலாபம் தேட முயற்சிப்பது பொறுத்தமற்றதென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் 12, 18 மற்றும் 25 ஆகிய நாள்களில் 'தித்வா' புயல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் ஆளும்தரப்புக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தாகக் கூறப்படுவதை ஆதரத்துடன் நிரூபிக்குமாறு எதிர்க்கட்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பிற்கு சவால் விடுக்கின்றோம். நவம்பர் 12, 13 'தித்வா' புயல் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முன்னெச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்வு கூரல்களே முன்வைக்கப்படுகின்றன. அரசியல் நோக்கங்களுக்காக இந்த எதிர்வு கூரல்கள் உதாசீனப்படுத்தப்பட்டால் காலநிலை தொடர்பில் எதிர்காலத்தில் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத நிலைமை தோன்றும். ஒக்டோபர் - நவம்பர் காலத்தில் இந்து சமுத்திரத்தில் வழமையாக ஏற்படும் காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்பிலேயே நவம்பர் 13 அறிவிக்கப்பட்டது. நவம்பர் 18 குறித்த காற்றழுத்த தாழ்வு நிலையானது வலுவிழந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாறாக அந்தச் சந்தர்ப்பத்தில் 'தித்வா' என்ற பெயர் கூற குறிப்பிடப்படவில்லை. நவம்பர் 18 இரவு வங்காள விரிகுடாவை அண்மித்து மீண்டுமொரு காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டு, அது நவம்பர் 22 - 24 வரை சுமாத்திரா, மலேசியா, இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைக் கடந்து சென்றது.

இதன் தாக்கத்தால் அந்த நாடுகளில் சுமார் 1200 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை, சூறாவளியாக வலுப்பெற்றதன் பின்னர் 'சென்யார்' எனப் பெயரிடப்பட்டது.

எமது வளிமண்டலவியல் திணைக்களம் நவம்பர் 18, 19 மற்றும் 20 ஆகிய நாள்களில் அதனை அவதானித்து, அதன் தாக்கம் கடற்பிராந்தியத்திலேயே அதிகமாகக் காணப்படும் என எச்சரித்தது. அந்த எச்சரிக்கையை பின்பற்றியமையால் இடரால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடிந்தது. நவம்பர் 25இன் பின்னரே மூன்றாவது காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடைந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஓரளவு முன்னாயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

நவம்பர் 27 காலை வேளையின் பின்னரே இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று சூறாவளியாக மாற்றமடைந்தது. அதன் பின்னரே அது 'தித்வா' எனப் பெயரிடப்பட்டது. இந்தச் சூறாவளி கிழக்கு கடல் ஊடாக தென்னிந்தியா நோக்கி நகரும் என எதிர்வு கூறப்பட்ட போதிலும், அதன் நகர்வு பாதையில் மாற்றம் ஏற்பட்டு நாட்டுக்குள் நுழைந்தது. அது மாத்திரமின்றி இந்த சூறாவளி சுமார் 48 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் அதாவது 48 - 72 மணித்தியாலங்கள் நாட்டுக்குள்ளிருந்து மிகவும் மந்தமாகவே நகர்ந்தது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வு கூறல்களுக்கமைய மண்சரிவு அபாய எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்த பெரும்பாலான பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேறவில்லை. சில பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பு படையினரால் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். எவ்வாறிருப்பினும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் உயிர் முன்னாயத்தங்களாலேயே பாதுகாக்கப்பட்டது.

வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என அனைத்தும் தமது கடமைகளை சரிவரச் செய்துள்ளன. எவ்வாறிருப்பினும் பேரிடர்களால் உயிரிழந்தவர்களுக்காக எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த ஒரு புயலால் 1,242 மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் ஒரே தடவையில் இந்தளவு எண்ணிக்கையிலான மண்சரிவுகள் ஒருபோதும் பதிவாகவில்லை. உயிரிழப்புக்களைத் தடுக்க முடியாது போனமைக்கு இதுவே காரணமாகும். எனவே இந்தச் சம்பவத்தை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் ஒப்பிடுவது நியாயமற்றது - என்றார்.

## இலங்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் துணை வெளியுறவுச் செயலாளர் இதன்போது குறிப்பிட்டார். போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான இலங்கை ஆளும்தரப்பின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் பல்வேறு உதவி மற்றும் உதவிக் குழுக்களை நாட்டிற்கு அனுப்புவதில் அமெரிக்க அரசுத் தலைவரும் ஆளும்தரப்பும் வழங்கிய ஆதரவிற்கு அரசுத் தலைவர் அநுரகுமார நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங்கைக்கு அளித்த மனப்பூர்வமான ஆதரவுக்கு அரசுத் தலைவர் பாராட்டுத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திப் பொருளாதார குறிகாட்டிகளை உயர்த்தி வரும் நிலையிலே இலங்கைக்கு இந்த பேரிடரிற்கு முகங்கொடுக்க நேரிட்டதாகச் சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நீண்டகால அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்கள் உள்ளிட்ட முக்கிய வருமான வழிகளையும் மீட்டெடுக்க சிறிது காலம் எடுக்கும் என்றும், இது தொடர்பாக அனைத்து நட்பு நாடுகளின் உதவிகளையும் எதிர்பார்க்கிறார் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலான அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் எனவும், தொடர்ந்தும் இதுபோன்ற வருகைகளை எதிர்பார்ப்பதாகவும் இதன்போது தெரிவித்த அரசுத் தலைவர் அநுரகுமார, தற்போதைய பேரிடர் நிலமையிலிருந்து மீண்டு இலங்கை மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய அமெரிக்க ஆளும்தரப்பே வழங்கும் பங்களிப்பைப் பாராட்டினார்.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான இராஜாங்க துணைச்செயலாளரான அலிஸன் ஹூக்கர் அரசுமுறைப் பயணமாக நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை ஆழப்படுத்துதல், பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் மற்றும் இலங்கையின் பொருளாதார மற்றும் கடல்சார் இறையாண்மையை ஆதரித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக துணைச்செயலாளர் ஹூக்கர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பிராந்தியப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் செழிப்பு ஆகியவற்றிற்கான எமது பரஸ்பர உறுதிப்பாட்டில் வேரூன்றிய ஒரு வலுவான மற்றும் நீடித்த பங்காண்மையினை அமெரிக்காவும் இலங்கையும் பகிர்ந்துகொள்கின்றன.

இராணுவ, வர்த்தக மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் நெருக்கமான ஒத்துழைப்பின் ஊடாக, சுதந்திரமான, திறந்த மற்றும் மீண்டெழும்தன்மை கொண்ட ஒரு இந்தோ-பசிபிக் பிராந்தியத்தினை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதாகவும் அமெரிக்க தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எமது மூலோபாய பங்காண்மையினை நாம் தொடர்ந்து கட்டியெழுப்பும்போது, 'தித்வா' சூறாவளியின் பேரழிவுகரமான தாக்கங்களுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகளை இலங்கை மக்கள் மேற்கொள்ளும் இவ்வேளையில் அமெரிக்கா அவர்களுடன் துணை நிற்கிறது.

எமது இரு நாடுகளுக்கும் இருக்கின்ற உடனடி சவால்கள் மற்றும் நீண்டகால வாய்ப்புகள் ஆகிய இரண்டு விடயங்களையும் எதிர்கொள்வதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளதாகவும் அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# வீடுகள் பாதிக்கப்பட்டவர்கள் பொருள்களை வாங்க ரூ. 50,000

## அரசு வழங்குகிறது என்கிறார் அமைச்சர்

வீடுகளை தூய்மைப்படுத்தி அவற்றில் குடியேறக் கூடியவர்களுக்கு அதற்காக 25 000 ரூபாவும், அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் 50 000 ரூபாவழங்கப்படுகிறது. இந்த 75000 ரூபாவில் மீண்டும்வாழ்க்கையைத்தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின்வாழ்வாதாரத்தைமேம்படுத்துவதற்கு ஆளும்தரப்பே இயன்றளவான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

இயற்கை பேரிடர்களால் சுமார் 18 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இன்றும் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் எந்தவொருசந்தர்ப்பத்திலும்பேரிடர்களின்போது வழங்கப்படாதளவு உதவிகள் எமது ஆளும்தரப்பால் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட இடையூறுகள் குறிப்பிடத்தக்களவு தகர்த்தப்பட்டுள்ளன. வீடுகளை தூய்மைப்படுத்தி அவற்றில் குடியேறக் கூடியவர்களுக்கு அதற்காக 25 000 ரூபா வழங்கப்படுகிறது. மேலும் 50 000 ரூபா அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படுகிறது. இந்த 75 000 ரூபாவில் மீண்டும் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக விவசாய நிலங்கள், பயிர் செய்கை பாதிக்கப்பட்டிருப்பின் ஹெக்டயாருக்கு 2 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது. அதேபோன்று தொழிற்சாலைகள் சேதமடைந்திருந்தால் அவற்றின் உரிமையாளர்களுக்கும் 2 இலட்சம் ரூபா வழங்கப்படும். மேலும் விலங்கு பண்ணைகள் வைத்திருப்பவர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பல்வேறு துறை சார்ந்தவர்களுக்கும் இவ்வாறு உதவி வழங்கப்படுகிறது.

இவற்றுக்கு அப்பால் டிசெம்பரிலிருந்து 3 மாத காலத்துக்கு 50 ஆயிரம் ரூபாவை வாழ்வாதாரக் கொடுப்பனவாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வழங்க முடியுமான சகல உதவிகளையும் வழங்கியிருக்கின்றோம். பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு 25 இலட்சம் ரூபாவும், முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு 50 இலட்சம் ரூபாவும் வழங்கப்படும். நாம் வழங்கும் தொகை வீட்டின் பெறுமதிக்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கலாம். எவ்வாறிருப்பினும் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே இவை வழங்கப்படுகின்றன.

இவை அனைத்தும் மக்களின் வரிப்பணத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் மேலும் வரியை அதிகரிக்காமல், வரி சேகரிப்புப் பொறிமுறையை வலுப்படுத்தி வரி வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் மாத்திரமே இவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும். பேரிடர்ங்கள் சொத்துக்களை மாத்திரம் சேதப்படுத்தவில்லை. பொருளாதாரத்தையும் சிதைத்துள்ளது. இவற்றிலிருந்து மக்களை பாதுகாப்பாக மீட்டெடுப்பதே ஆளும்தரப்பின் இலக்காகும் - என்றார்.

# மலையகத் தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு துணை நிற்கும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களுக்கு எப்பொழுதும் போலவே வடக்கு - கிழக்கு என்றும் துணை நிற்கும் என்று தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது குறித்து ஊடக அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'தித்வா'சூறாவளியானதுமலையகம்உட்பட இலங்கைமுழுவதையும்புரட்டிப்போட்டுள்ளது. மலையகத்தில்எழுநூறுக்கும்மேலானமக்கள் நிலச்சரிவுகளில் அகப்பட்டு மண்ணுக்குள் புதையுண்டு இறந்துள்ளனர். முன்னரும்கூட இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றாலும் இப்பொழுதுஇதுமிகவும்பாரதூரமானஅளவில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு பாரிய அளவிலான அந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் பெருந்தோட்ட உறவுகள் 250 வருடங்களாக சொந்த நிலமின்றி, சொந்த வீடின்றி, அல்லலுறும்நிலையையேஇதுவரை நாங்கள் பார்த்து வருகின்றோம்.

இலங்கையில் அவ்வப்போது ஏற்படும் இனப்படுகொலைகளின்பொழுது மலையகத் தமிழர்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு புகலிடம் தேடி வடக்கு-கிழக்கில் குடியேறியுள்ளனர். 1977, 1981 மற்றும் 1983 காலப்பகுதிகளில் இவ்வாறு பல்லாயிரக்கணக்கானமக்கள்வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் குடியேறியுள்ளனர். அவர்கள் இன்று தங்களுக்கான காணிகளுடனும்வீடுகளுடனும்இருப்பதுடன் கல்வியிலும் மேம்பட்டு தம்மைத் தாமே கவனித்துக்கொள்ளக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்த உடன் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினூடாக, ஒருபகுதி மக்கள் இந்தியா சென்றுவிட மறுபகுதியினர் இலங்கையில் தங்கினர். அவ்வாறு இலங்கையில் இருந்தவர்களுக்குக்கூட முழுமையான வாக்குரிமை மற்றும் குடியுரிமையைக் கொடுக்க இலங்கை அரசாங்கங்கள் மறுதலித்தே வந்தன. 1985ஆம் ஆண்டு, இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்பிற்கும் இடையில் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தையின்போது, தமிழர் தரப்பினர்நான்குமுக்கியமானகோரிக்கையை முன்வைத்தனர். அதில் ஒன்று இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்து மலையகத் தமிழ் மக்களுக்கும் வாக்குரிமை, குடியுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இதன் பின்னர், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடன் பேசி, அம்மக்களுக்கான வாக்குரிமை, குடியுரிமை என்பன வழங்கப்பட்டன. ஆனால் இன்றும் அவர்களில் பெரும்பாலானோர் காணி உரிமை அற்றவர்களாகவும் எவ்வித முன்னேற்றமும் அற்றவர்களாகவும் தேயிலைத் தோட்டத்தின் லயன்களில்வசிப்பவர்களாகவுமேஇருக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் இயற்கை அனர்த்தங்களால் அந்த மக்கள் தொடர்ச்சியாக தமது உயிரை அர்ப்பணித்து வருவதானது, ஏற்புடைய விடயமல்ல. ஆகவே, எமது பெருந்தோட்ட உறவுகளுக்கு இலங்கை அரசாங்கம், மலையகத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களை வழங்கி, இயற்கை அனர்த்தத்திலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் வடக்கு-கிழக்கில் அந்த மக்கள் குடியேறி வாழ விரும்புகின்ற சூழ்நிலையில், அதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்க தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர்.

முன்னர் ஏற்பட்ட இனக்கலவரங்களின்பொழுதும்வடக்கு-கிழக்கிற்குத்துறத்தப்பட்ட எமது உறவுகளை வரவேற்று உபசரித்து அவர்கள்அச்சமின்றிவாழக்கூடிய அடிப்படையில் காணிகளை வழங்கி, தேவையான உதவிகள் செய்யப்பட்டு, அவர்கள்மனிதர்களாகவாழக்கூடிய சூழ்நிலையை வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அரசு எவவ்ஶ்ரீத உதவியையும் செய்யாமலேயே தமிழ்த் தொண்டு நிறுவனங்களும் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

மலையக உறவுகள் வடக்கு-கிழக்கில் குடியேற விரும்பும் பட்சத்தில் புலம்பெயர் தேசத்தில் வசிக்கின்ற மக்களின் காணிகளை மட்டுமன்றி, அவர்களின் தேவையின் அடிப்படையில் காணிகளை வழங்கி, அவர்கள்நிரந்தரமாகவும்பாதுகாப்பாகவும்வாழ்வதற்கான நடவடிக்கைகளை தமிழ் தரப்புகள் மேற்கொள்ளத் தயாராகவே இருக்கின்றனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்களிப்பும் மகத்துவமானது. மலையக மக்கள் வடக்கு-கிழக்கில் குடியேறுவது புதியதுமல்ல. அவர்களுக்கு இந்தப்பிரதேசம் அந்நியமானதுமல்ல.

இந்த நாட்டில் மாறிமாறி வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட இனப்படுகொலைகளின் காரணமாகவே மலையக மக்கள் புலம்பெயர்ந்து வடக்கு-கிழக்கிற்கு வந்தார்கள். யுத்தத்தின்காரணமாகவடக்கு-கிழக்கிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச்சென்றார்கள். ஆகவே, புலம்பெயர்தல் என்பது வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் நடைபெற்றுக்கொண்டே வந்துள்ளது. இப்பொழுது இயற்கை அனர்த்தம் அவர்களைப் புலம்பெயரச் செய்தால் அவர்களுக்கான வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் உருவாக்க அரசாங்கம் தவறினால் அவர்களை அரவணைத்துப் பாதுகாப்பதில் வடக்கு-கிழக்கு முன்னிற்கும் - என்றுள்ளது.

# சுகாதாரக் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 150 மில்லியன் டொலர் கடன்பெற ஒப்பந்தம்

தொடக்கநிலை சுகாதார பராமரிப்புக் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்தின் கீழ் 150 மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு உலக வங்கிக் குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் நிதி ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டுள்ளது.

தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம், முதியோர்களுக்கான பராமரிப்பு உதவிகள், சமூக மட்டச் சேவைகளைப் பலப்படுத்தல் மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய அவசர சுகாதார நிலைமைகளுக்கு மீட்சித்திறனைக் கட்டியெழுப்புவதல் உள்ளிட்ட சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில், குறித்த கருத்திட்டம் 2024 தொடக்கம் 2028 வரையான காலப்பகுதியில் இலங்கையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் அமுல்படுத்தப்படும்.

களநிலைப் பணியாளர்கள் (குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு தாதியர் மற்றும் கண்காணிப்புக் குழு) இற்கான போதியளவு போக்குவரத்து இன்மையால் இக்கருத்திட்டத்தில் அடையாளங் காணப்பட்ட தீர்மானம்மிக்க தடையாக அமையும்.

அதனால், வீட்டுமட்டத்திலான பராமரிப்பு மற்றும் சமூகத் தொடர்புகளை விரிவாக்கம் செய்தல், களநிலை ஆய்வுகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேம்படுத்தல், சிகிச்சைக் கழிவுகளைப் பாதுகாப்பாகவும் சரியான நேரத்தில் ஏற்றிச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கான போக்குவரத்து இயலுமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வாகனங்களை பெறுகை செய்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கிண்ணியா பல்கலை வளாகக் காணியை அயலுறவு அமைச்சுக்கு வழங்க அனுமதி

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டுமானங்களை அயலுறவுத்துறை வெளி விவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் உப்பாறு கிராம அலுவலர் பிரிவில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணியில் கிண்ணியா பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவகத்தை நிர்மாணிப்பதற்கு 2017.06.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானங்களுக்கு 25.45 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. பின்னர் மேலெழுந்துள்ள நிலமைகளால் அப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான நிறுவகம் திட்டமிட்டவாறு அக்காணியிலேயே மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லையென்பதை தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

அதனால், கிண்ணியா பல்கலைக்கழகத்தின் தொடர் நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கும், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு, பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணி மற்றும் அதன் கட்டுமானங்களை சுற்றுலாத்துறைக் கருத்திட்டமாக அமுல்படுத்துவதற்கு அயலுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பிள்ளையாருக்கு கல்யாணம்?

**என்.சத்தியமூர்த்தி**

'தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத...'

இந்த வசனம், சென்னையில் இருந்து வெளிவந்து கொள்டிருந்த 'அம்புலிமாமா' பத்திரிகையை படித்துவந்த தலைமுறையினருக்கு பழக்கப்பட்டது. ஏன், இந்தப் பத்தி வாசகர்களுக்கும்தான். அந்த வசனம் ஆவி சம்மந்தப்பட்ட கதை தொகுப்பு. இந்த வசனம், தமிழ் அரசியல் பிரிவுகளுக்கு இடையேயான கூட்டு பேச்சுத் தொடரை மையமாகக்கொண்டது. என்றாலும், மீண்டும் ஒரு முறை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் இணைந்து செயல்படப் போவதாக அறிவித்துள்ளது வரவேற்கதக்க விடயம்.

இரு தரப்பினருக்கும் பேச்சு நடந்ததை தொடர்ந்து, தமிழ் அரசு கட்சியின் பொது செயலாளர் சுமந்திரனின் கூற்றின் படி, மாகாண சபை தேர்தல் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய இரண்டு விடயங்கள் குறித்து மட்டுமே, தற்போதைக்கு அவர்கள் சேர்ந்து செயலாற்றப் போகிறார்கள்.

சாதரண மக்கள், அல்லது இன்னமும் தமிழ் அரசியலோடும் தமிழ் அரசியல்வாதிகளோடும் அல்லாடிக் கொண்டிருக்கும் மக்கள், இந்த முறையாவது இரு தரப்பினரும் ஒரு குறித்த புள்ளியை நோக்கிச் சேர்ந்து பயணிப்பார்கள் என்று எதிர்பார்ப்பார்கள். இந்த முறையும் அவர்கள் எதிர்பார்ப்புகளை பொய்ப்பித்தால், அந்த மக்கள், இவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்ல. கொத்துக் கொத்தாக, தமிழ் மக்கள் ஆளும் ஜேவிபி-யை நோக்கி பயணிப்பதை இவர்கள் யாரும் தடுக்க முடியாது. இல்லையென்றால், அந்த வாக்காளர்கள் தேர்தல் நாளன்று வீட்டிலேயே முடங்கி விடுவார்கள். இந்த முறை அவர்களை உலுக்கி எழுப்பி, மீண்டும் தமிழர் அரசியலில் பயணிக்க செய்வது பிரம்ம பிரயத்தனம் ஆகிவிடும்.

## பேரிடரின் மீது பழி

ஒற்றை நோக்கில் பார்த்தால், இந்த முறை இந்த இரு அரசியல் கட்சிகளும் ஒரு சேர பயணிக்க செய்வதில் உள்ள பிரச்சினை, அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள தலைப்புகள்தான். மாகாண சபைத் தேர்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள், பிள்ளையாருக்கு கல்யாணம் வகையைச் சேர்ந்தது.

இவற்றில், மாகாண சபை தேர்தலை நடத்துவது என்பது, தமிழர் பகுதிகளுக்கு மட்டும் சம்மந்தமான விடயம் அல்ல. நாடு முழுமைக்குமான விடயம். இதில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் செயலாற்றும் இரண்டு கட்சிகளோ, அணிகளோ சேர்ந்து கேட்டுக்கொண்டால் மட்டும் அரசு செவி சாய்த்து விடுமா, என்ன?

முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே, தற்போது அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்காவின் ஜேவிபி-என்பிபி ஆளும்தரப்பும் மாகாண சபை தேர்தலை ஒத்திப்போட முயற்சி செய்வதாகவே செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அந்தச் செய்திகள் உண்மையாய் இருந்தால், அண்மையில் அரங்கேறிய பேரிடரின் மீது பழி போட்டுவிட்டு, அரசு, மாகாண சபைத் தேர்தலை இன்னும் ஓர் ஆண்டிற்கு மட்டுமாவது தள்ளிப்போட முடிவு செய்யலாம்.

பேரிடரைத் தொடர்ந்து மக்களுக்குத் தேவையான உதவிப் பணிகள் மற்றும் மறுவாழ்வு குறித்த முன்னெடுப்புகளில், அரச தலைமை மற்றும் அடிமட்டம் வரை உள்ள அதிகாரிகளும் அதிக கவனம் செலுத்தவேண்டும். அது போன்றே, இந்த உதவிப் பணிகளுக்குச் செலவு செய்ய அதீத நிதி தேவை என்றால், எவ்வளவுதான் முக்கியம் என்றாலும், மாகாண சபைத் தேர்தல் போன்ற விடயங்களை ஒத்தி போடுவதை தவிர்க்க முடியாது. அல்லது இவ்வாறான காரணத்தை அரசு முன்னெடுக்கும்.



## கேள்விக் குறி

இது போன்றே. அரசியல் தீர்வு குறித்த தீர்க்கமான எந்த முன்னெடுப்புகளையும் இந்த அரசு அடுத்து வரும் ஆண்டில் செய்யுமா, என்பதும் கேள்வி குறியே. இதுவரை, தனது மூன்றாவது ஆண்டில் புதிய அரசமைப்புச் சட்டம் குறித்த முன்னெடுப்புகளைச் செய்யப்போவதாக அறிவித்த அநுர, தற்போது அதனையும் 'தித்வா' புயலுக்கு தானமாக்கி விட்டால், யாரும் ஆச்சரியப்படவேண்டாம்.

குறிப்பாக இந்த அரசு, அரசமைப்புச் சட்டம் குறித்து புதிய முன்னெடுப்புகளைச் செய்யுமேயானால், அது ஆட்சியில் தனது தோல்வியை, அல்லது தோல்விகளை ஒத்து கொண்டதற்குச் சமம். அதிலும் குறிப்பாக, இப்போது எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுவது போல், பேரிடரினை எதிர்கொள்ள இந்த அரசு தவறிவிட்டது என்ற எண்ணவோட்டம் நிலைத்தால் மட்டுமே, மக்களை திசை திருப்ப, அநுர தலைமை புதிய அரசமைப்பு சட்டம் குறித்து பேச முயலலாம்.

ஆனால், இந்த இரண்டில் ஒன்றே அடுத்த ஆண்டில் சாத்தியம். அதாவது, மக்களை அரசமைப்புச் சர்ச்சை பக்கம் திருப்பிவிடும் அளவிற்கு, அரசு கட்டாயப்படுத்தப்பட்டால், அவர்கள் ஒன்பது மாகாண சபை தேர்தல்களில் வெற்றி பெறுவது அரிது என்பது நிச்சயம் ஆகிவிடும்.

அதேசமயம், புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளைக் கலைத்து, அவற்றின் இடத்தில் புதிய அமைப்புகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது என்று அநுர சொன்னதும் நினைவில் கொள்ளப்படவேண்டும். இந்த விடயத்திலும் தமிழ் தலைமைகளால்



சாதிக்க முடியப்போவது எதுவுமில்லை.

அவற்றிற்கான முன்னெடுப்புகளையும் முயற்சிகளையும் தென்னிலங்கை எதிர்கட்சிகளால் மட்டுமே வெற்றிகரமாகச் செய்ய முடியும். ஆனால், அவர்களில் பலரும் இன்றளவும் மாகாண சபை திட்டத்தை அடிமனதில் எதிர்க்கவே செய்கின்றனர். மொத்தத்தில், கொழும்புத் தலைவர்களில் எவருக்கும் தங்களது அதிகாரத்தை மாகாணங்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அவர்கள் அதனை வெறுக்கிறார்கள் என்பதே உண்மை.

## மச்சான், மச்சாங்

தமிழர்களின் அரசியல் தீர்வில் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளே மாகாண சபை திட்டத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. மாகாண சபையே தேவையில்லை என்ற ஒரு மனநிலையில் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் செயல்படும்போது, அவர்களில் ஒரு பகுதியினரையாவது தங்களுக்கு ஆதரவாக மாற்றினாலே, தமிழர் தரப்பு, மாகாண சபைத் தேர்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதில் அர்த்தமிருக்கும்.

சரி, கொழும்பு தலைமைகள்தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், தென் மாகாணங்களில், அவர்களுடைய கட்சிகளைச் சேர்ந்த இரண்டாம்கட்ட தலைவர்களை குறிவைத்து தமிழர் தரப்பு, காய் நகர்த்தவேண்டும். இங்குள்ள தலைவர்களில், சுமந்திரன் உள்ளடக்கம் எத்தனை பேருக்கு மாத்தளைக்கும் மாத்தறைக்கும் வித்தியாசம் தெரியும்?

அதாவது, தமிழ் தலைவர்களில் யாராவது, தென் மாகாணங்களில் உள்ள முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள், அங்குள்ள உள்ளூராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை. 'மச்சான்' அல்லது அவர்களுடைய பாணியில் 'மச்சாங்' என்ற அடைமொழி இட்டு, அழைத்து 'சீரியஸான' அரசியல் விடயங்களைப் பேச முடியும்?

மொழி ஒரு தடை. உண்மை. ஆனால் அது மட்டும்தானா? மனநிலை ஒரு தடை. ஆனால், தென்னிலங்கை இரண்டாம், மூன்றாம் கட்ட தலைமைகளின் உண்மையான மனநிலையை இவர்கள் அறிவார்களா? அல்லது. அவர்களில் ஒருவரையாவது, இவர்கள் கூறும் கடும் போக்கு அரசியலில் இருந்து திசை திருப்ப முற்பட்டு இருக்கிறார்களா? முயற்சி எடுத்திருக்கிறார்களா?

## நிதர்சனம்

காலம் சென்ற சம்மந்தன் மட்டும் இந்த நிதர்சனத்தைக் கடைசியில் புரிந்துகொண்டு, கண்டியில் பௌத்த மதத்தின் முக்கிய குருமார்களைக் கண்டு பேச்சு நடத்தினார். அதனைத் தொடர்ந்து, அவர் தென்னிலங்கையில் பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார் என்று சொல்லப்பட்டது. ஆனால், வடக்கு-கிழக்கு மற்றும் அவர்களை இயக்கும் புலம்பெயர்ந்தோர் அழுத்தத்தால், தனது முயற்சியைத் தொடங்கு முன்னரே கைவிட்டு விட்டார்.

இதில் முரண்பாடு என்னவென்றால், இதே தமிழ் தலைவர்கள், சேர்ந்தும் தனித்தும் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதராலயங்களுக்குச் சென்றும் தங்களது அரசியல் தேவைகள் குறித்து மணிக்கணக்கில் கதைப்பார்கள். அங்குள்ள அதிகாரிகளுக்கு, இவர்களைச் சந்திப்பதில் ஆர்வம் இல்லை என்றாலும், அவர்களுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, கெஞ்சாத குறையாக தொடர்ந்து கோரிக்கை விடுத்து, தூதராலய அதிகாரிகளுடன் போட்டோ எடுத்து அதை செய்தி ஆக்குவதில் மட்டும் இவர்களுக்கு அலாதி பிரியம்.

இதுதவிர, தென்னிலங்கை ஆகட்டும் அல்லது இங்குள்ள தமிழர்கள் ஆகட்டும், பலரது குடும்பத்தவர்களும் ஏதாவது வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டு அங்குள்ள மொழியைப் படித்து அதில் தேர்ச்சி பெறுகிறார்கள். அவ்வாறு செய்தால் மட்டுமே, அவர்களால் அங்கு குப்பை கொட்ட முடியும். அவர்களுடைய அடுத்தடுத்த தலைமுறையினர், 'வாட்ஸ் டமில், டாடி?' என்ற அளவிற்கு அன்னியப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

இனப்போர் காலத்தை விட்டு விடுவோம். புலம்பெயர்ந்தோரில் எத்தனை பேர், அந்த அந்நிய நாடுகளில் இருந்து, தாய் நாடு திரும்பி வாழவேண்டும என்று விரும்புகிறார்கள்? சும்மாவாவது, நல்லூர் கோவில் திருவிழாவிற்கு புலம்பெயர்ந்தோர் கூட்டத்தைக் கூட்டிக் காட்டுவதோடு, இவர்களது தாய் நாடு குறித்த கரிசனைகளும், கவலைகளும் முன்னெடுப்பகளும் முடிந்து விடுகின்றன. ஆனால், இங்குள்ளவர்கள் மட்டும், தங்களது அரசியல் பிரச்சினைகளுக்கு உள் நாட்டிலேயே தீர்வு பெற்றுக்கொள்வதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

## முதல் கோணல்

தற்போதைய சூழலில், தமிழர்கள் ஒரே அணியில் நின்றால்தான் தங்களது உரிமைகள் குறித்து பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கும் அர்த்தம் இருக்கும். அதனால் மட்டும், தீர்வு கிடைத்துவிடும் என்பதல்ல பொருள். ஆனால், தற்போது, முதல் கோணல், முற்றும் கோணல் என்ற நிலையிலேயே தமிழர் அரசியல் பயணிக்கிறது. எனவே, மாகாண சபை தேர்தல் மற்றும் அதிகார பரவல் குறித்தெல்லாம் அரசிற்கு அழுத்தம் கொடுக்கப் போகும் தமிழ் அரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசி கூட்டணி மட்டுமாவது, மாற்றி யோசித்து செயல்பட, இடைப்பட்ட காலத்தில் முன்னெடுப்புகளைச் செய்யவேண்டும்.

அந்தக் காலத்தை பயன்படுத்தி, கஜேந்திரகுமார் உள்ளிட்ட பிற தமிழ் தலைமைகளையும் உள்வாங்கிக் கொள்வதற்கான பொறிமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

இனப்பிர்ச்சினை என்று வரும்போது, தனி மனித கௌரவத்திற்கும் அரசியல் தலைமை குறித்த எதிர்பார்ப்புகளுக்கும் அங்கே இடமிருக்கக்கூடாது. அது போன்றே, இனப்போர் காலத்தில் ஒரு நிலையை எடுத்தார் என்ற ஒரே காரணத்திலனால், யாரையும் புறம் தள்ளக்கூடாது.

இன்றைய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தலைவர்களே, ஒரு காலத்தில் ஆயதம் எடுத்துப் போர் செய்தவர்கள்தான். அதுவும் பிற தமிழ் தலைவர்களையும் அப்பாவி மக்களையும் குறிவைத்துத் தாக்கியவர்கள்தான். விடுதலை புலிகள் அமைப்பு இவர்களது தலைவர்களையும் போராளிகளையும்; கொன்று குவித்த பின்னரே, வேறு வழியே இல்லாமல் மிதவாத அரசியல் பக்கம் திரும்பினார்கள்.

## யார் நல்லவன்?

அது போன்றே, தமிழர்களில் 'யார் நல்லவன், யார் கெட்டவன்?' என்று முடிவு செய்ய உள்நாட்டில் தமிழ் அரசுக் கட்சிக்கும், புலம்பெயர்ந்தோரில் ஒரு சில குழுக்களுக்கும், யார் அதிகாரம் கொடுத்தது? அவ்வாறென்றால், இனப்போர் காலததில்கூட அனறைய மகிந்த அரச தலைமைக்கு ஆதரவு கொடுத்த சாணக்கியன் போன்றோரை, எப்படி தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொண்டு, ஞானஸ்தானம் செய்தார்கள்?

அதற்காக, இன்று சாணக்கியன் தனது இதயத்தை திறந்து காட்டி தனது தமிழ் தன்மையை காட்டவேண்டும் என்றல்ல பொருள். இன்னும் சொல்லப்போனால், தற்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில், அரசை தொடர்ந்து குடைந்து வருபவர்களில் அவரும் முக்கியமானவர். ஆனால், விடயம் இவ்வளவு தானா?

இன்று ஆளும் ஜேவிபி-என்பிபி தரப்பினருக்கு வட மாகாண தமிழர்களின் தேர்தல் ஆதரவு இருக்கிறது என்றால், அதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் இடையே ஒற்றுமை இல்லை என்பதே முழுமுதற் காரணம். அதன் காரணமாகவே, குறிப்பிட்ட வாக்கு வங்கிகள், ஆட்சியாளர்களை நோக்கிப் பயணித்தது.

இதுதானே உண்மை?



உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# இளையோரை எதிர்பார்த்திருக்கும் இலங்கைச் சைவத் தமிழ் சூழல்

அன்பே சிவம் அன்பில் வளர்ந்ததே சைவம் என்று திருமூலர் கூறிய அருஞ்சொற்றொடர் நாம் அனைவருக்கும் சைவத்தைப் பற்றியும் தமிழைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு பெருந்துணையாக விளங்குகின்றது. ஆனாலும் சைவத்தினதும், தமிழினதும் வளர்ச்சிப் பாங்கு என்பது தற்காலத்து சூழலில் எவ்வாறு உள்ளது என்பதோடு அதில் எவர் எவருக்கெல்லாம் பங்கு உள்ளது என்று ஆராய்ந்தால் தமிழனாய்ப் பிறந்த அனைவருக்குமே பங்கு உண்டு. ஆனால் தற்போது எல்லோரையும் எதிர்பார்த்து நிற்காமல் இளையோரை எதிர்பார்த்து நிற்கவேண்டிய சூழல் ஏற்பட்டு விட்டது. அவ்வளவிற்கு சைவமும் தமிழும் வளர்ச்சிப் பாதையில் செல்லாது சற்று தளர்வடைந்து பின்னோக்கிப் போவதே காரணம். நாம் அனைவரும் முதலில் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். சைவத்தமிழ் என்றால் என்ன என்பதை, அதாவது தமிழ் சமுதாயத்தில் சைவம் என்பது ஆன்மீகத் தழுவலான ஓர் அடையாளம். அது மட்டுமன்றி மெய்கண்ட சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாக ஒரு அடிப்படைப் பொருளாக அமைந்துள்ளதோடு பல நூற்றாண்டுகளாக இலக்கியம், கலை, வாழ்வியல் மற்றும் சமூகவியலின் வழியாக வளப்படுத்திவரும் ஒரு சிறந்த அம்சங்கள் யாவும் பெற்ற வழிப்படுத்தி.

இத்தனை சைவத்தமிழ் சங்ககாலம் தொட்டே வளர்ந்து தான் வந்தது. ஆனால் தற்கால கட்டத்தில் சைவத்தமிழின் வளர்ச்சி குன்றிவிடுமோ என்ற அச்சமும் இருந்துகொண்டுதான் உள்ளது. ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தனது இரு கண்களைப்போல கருதிசைவத்திற்காகவும்தமிழின்வளர்ச்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டார். தனது வாழ்க்கையையே துச்சமாக எண்ணி சைவத்திற்கும் தமிழிற்கும் மட்டுமே தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் தனது வாழ்க்கைக் காலத்தைக் களித்தார். ஒன்றா? இரண்டா? எவ்வளவு பணிகளை மேற்கொண்டு சைவத்தினதும் தமிழினதும் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். நூல்களைப் படைத்தும், சொற்பொழிவுகள் மற்றும் பிரச்சாரங்களை மேற்கொண்டும். வளர்த்து வந்தார் என்றால் மிகையாகாது. முக்கியமாக பாலபாடம் மற்றும் சைவ தமிழ் வினாத் தொகுப்புகள் என்று பல நூல்களை வெளியிட்டு அக்காலத்தில் அன்பே சிவம் தமிழே உயிர் என்ற அற்புத பொன்மொழிக்கு இணங்க வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தவரே ஆறுமுக நாவலர். ஆக்காலத்தில் இவர் மட்டுமல்ல அதற்கு முந்தைய சோளர் காலம், பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் சைவத்திற்கும் தமிழுக்குமாக பெரிதும் உழைத்தார்கள்.

நாயன்மார்கள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்றவற்றை அருளிச் சென்றமை சைவத்திற்கும் தமிழுக்குமான ஓர் ஆழமான அடித்தளம். முற்றும் தமது வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து நற்கருமங்களைப் பற்றியும் எடுத்து இயம்புகின்றது. அதாவது சைவ சித்தாந்தத்தை நோக்குவோமானால் ஆன்மா இறைவனை அடைய மூன்று எழுத்து தத்துவமான பதி, பசு, பாசம் என்பவை வழிகாட்டுகின்றன. இவை மட்டுமன்றி சைவ சமயத்தில் அனைத்துமே நமது வாழ்வியல் நடவடிக்கைக்கு நாளாந்தம் ஒரு நற்கருத்தையே புகுத்துகின்றது. உதாரணமாக, சைவ சமய புராணங்களான கந்தபுராணம், சிவபுராணம், பெரிய ரபுராணம், கருட புராணம் போன்ற புராண நூல்கள் ஒவ்வொன்றுமே ஏதோவொருவிழுமியக்கருத்தையே புலப்படுத்துகின்றது. இவ்வாறு நற்கருர்ர்க்களைப் புலப்படுத்தி நின்றமையாலே அதனை யாவரும் படித்து அது தொடர்பான ஆழமான கருத்தை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும் என்ற நோக்கோடு அன்றே திருமுறை ஓசை மங்காதபடி இளையோர் மனதில் ஒலிக்கட்டும் என்று கூறினார்கள்.

இவ்வாறு எல்லாம் சைவத்தைப் பற்றி கூறிச்சென்றாலும் அந்த சைவமும் தமிழ் என்ற ஒரு மொழியில் வளர்ந்ததால் தான் இன்றும் ஒரு பசுமைத்தோட்டம் போல அதன் பழமையை பாதுகாத்தபடி புதுமையைஷ்யும் வரவேற்க தயாராக விளங்கி வேரூன்றி நிற்கின்றது. இவ்வாறு எல்லாம் சைவமும், தமிழும் காணப்பட்டாலும் தற்போதைய காலகட்டத்தில் தற்போதைய காலகட்டத்தில் இளையோரை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஏனெனில் அன்று சைவத்தையும், தமிழையும் வளர்க்க பெரியோர்கள், நாயன்மார்கள், புலவர்கள், ஆழ்வார்கள் எனப்பலர் இருந்தார்கள். ஆனால் இன்று காலவோட்டத்தால் அவர்களின் மறைவின் பின் இன்றைய கால இளையோராகிய நாமே சைவத்தையும் தழிமையும் பாதுகாத்து போற்ற வேண்டிய கடமை உரியவர்களாக தற்காலத்தில் உள்ளோம். ஆனால் இன்றைய இளைஞர்களின் முன்னேற்றப் போக்கு என்று நோக்கினால் தொழில்நுட்பத்தின் பின்னே சென்றாலும், ஆன்மீகத் தேடலுக்கும், அடையாளத் தேடலுக்கும் இடையே பயணிக்கிறார்கள்.



இந்தச் சூழலில் இவர்களுக்கு ஆழமாக அமையக் கூடியவை சிவஞான போதகம், சைவசித்தாந்தம், திருவாசகம், திருமந்திரம் தேவாரப்பாடல்கள் போன்றவை தான் ஆழமான அடித்தளம். இவையெல்லாம் இவ்வாறு இருந்தாலும் இந்த சூழல் அவர்களை வரவேற்கும் வகையில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியதும் அவசியமான ஒன்றே தான். அதாவது அருங்காட்சியகங்கள், ஆன்மீக கலை நிகழ்ச்சிகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள் மற்றும் சமூக ஊடகங்களில் சைவப் பாரம்பரியத்தைப் பகிரும் முயற்சிகள் போன்றவற்றை மேற்கொண்டால் இவை இளையோரை ஈர்க்கும் பாலமாக அமையும். இவ்வாறான செயற்பாட்டை மேற்கொண்டால் சைவமும் தமிழும் கொண்ட ஒரு புதிய உலகுக்குள் முழுமையாக ஈர்த்து விடலாம். தற்போது சைவத்தையும், தமிழையும் வளர்த்து வருபவர்களாகக் காணப்படுபவர்கள் பெரும்பாலும் வயதானவர்களே. இந்த நிலை மாறி இளையோரையும் இந்த சூழலுக்குள் கொண்டுவந்தால் தமிழும் மேன்மை பெறும் சைவமும் தளைத்து செழிப்புற வளரும்.

இந்த உண்மையை இளையேராகிய நாமே புரிந்து கொண்டு செயற்படட வேண்டும். அதாவது பழமையைப் புரிந்து புதுமையைப் புனைந்து சைவத்தமிழின் ஒளியை மீண்டும் பரப்பும் ஒரு தலைமுறையை உருவாக்க இளையோரால்மட்டுமேபுரியும்என்றஉண்மையைஉணர்ந்து செயற்படுவதோடு நின்றுவிடாது. தமிழும் சேர்ந்தால் அதுவே சிவ வழி என்பதையும் புரிந்து கொண்டு செயற்படுவதோடு நின்றுவிடாது சைவ தமிழ் சூழல் என்பது ஒரு பண்டைய கோயில் போல அதன் சுவர்களில் வரலாறும் அதன் நிழலில் நம்பிக்கையும் மாத்திரமே ஊற்றெடுக்க வேண்டும். அவ்வாறு ஊற்றெடுத்தால் அந்தக் கோயிலின் வாசல் திறக்கப்படும். இக்கோயிலின் வாசல் திறக்கப்படுவதும் மூடப்படுவதும் இளையோராகிய நமது கைகளில் தான் உள்ளது என்பதை விளங்கிக் கொண்டு அதாவது இளையோரா எதிர்பார்த்துக் காத்திருக்கும் சைவத் தமிழ் சூழலுக்கு வலுச்சேர்க்கும் முகமாக அதாவது நிலைத்த காடு போல பழமை தாங்கிய மரங்களும், புதுமையை விதைக்க தயாரான நிலமும் உள்ளதற்கு ஒப்பான தமிழும் சைவமும் வளர்வதும் மடிவதும் அதாவது உயிர் கொடுக்கும் பொறுப்பும் வாய்ப்பும் நம் இளையோர் கையில் தான் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

சங்கே முழங்கு எங்கள் வாழ்வும் எங்கள் வளவும் என்றும் மங்காத் தமிழ்

**அவிலாஜினி**



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2025இல் வெளியிடப்பெற்றது